முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டு

**கல்வி அமைச்சு**

| 16 | T | I, II |
|---|---|---|

## தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

**இஸ்லாம் - I, II** | **நேரம் : 3 மணித்தியாலம்**

**மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**

வினாக்களை வாசித்து, வினாக்களை தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

### இஸ்லாம் - I

**அறிவுறுத்தல்கள்**

* 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
* உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுத்தல்களையும் கவனமாக வாசித்து பின்பற்றுக.

1. அகீதாவை பகுத்தறிவு கண்ணோட்டத்தில் ஆராய்ந்த குழுவினர்
   (1) முஃதஸிலா (2) முர்ஜியா (3) ஷீஆ (4) ஜபரிய்யா

2. சொல் சார்ந்த ரித்தத்திற்கு உதாரணம்
   (1) வட்டி எடுத்தல்
   (2) நபிமார்களை அவமதித்து பேசுதல்
   (3) அல்குர்ஆனை எரித்தல்
   (4) அல்லாஹ்வை விசுவாசம் கொள்ளாதிருத்தல்

3. அல் மாஉத் தஹூர் என்பது
   (1) சுத்தமான நீர் (2) அசுத்தமான நீர் (3) மிகச் சுத்தமான நீர் (4) பயன்படுத்தப்பட்ட நீர்

4. தக்பீர் தஹ்ரீமா என்பது
   (1) தொழுகைக்காக கட்டப்படும் முதல் தக்பீர்
   (2)ஹஜ் காலத்தில் ஓதப்படும் தல்பியா
   (3) ருகூவிலிருந்து எழுந்து நிற்கும் நிலை
   (4) ஸலாம் கொடுத்த பின் ஓதும் துஆ

5. குறித்த ஒரு பிரச்சினை தொடர்பில் முஜ்தஹித்களில் அதிகமானோர் ஒரு தீர்வில் ஒன்றுபடுவதை குறிப்பது
   (1) இஜ்மாஉஸ் ஸரீஹ்
   (2) இஜ்மாஉல்அக்ஸரிய்யா
   (3) இஜ்மாஉஸ் ஸூகூதி
   (4) இஜ்மாஉல் கௌலி

6. சுன்னத்தான நோன்பு நோற்பதற்கு பொருத்தமான வார நாட்கள்
   (1) வியாழன், வெள்ளி
   (2) ஞாயிறு, திங்கள்
   (3) திங்கள், வியாழன்
   (4) புதன், வியாழன்

7. நபி (ஸல்) அவர்களின் காலத்தில் தான் ஒரு நபி என வாதிட்டவன்
   (1) ஸஜா (2) முஸைலமா (3) துலைஹா (4) லபீத்

8. ஸக்காத் நிஸாபை அடைந்த நிலையில் ரூபாய் 800000/= இலங்கை நாணயத்தை வைத்திருக்கும் ஒரு-வர் வருட இறுதியில் கொடுக்க வேண்டிய ஸக்காத்தின் அளவு
   (1) ரூபாய் 10000 (2) ரூபாய் 20000 (3) ரூபாய் 30000 (4) ரூபாய் 40000

9. கிதாபுல் உம்மு என்ற நூலின் ஆசிரியர்
(1) இமாம் அபூஹனீபா (றஹ்) (2) இமாம் அஹ்மத் (ரஹ்)
(3) இமாம் ஷாபிஈ (ரஹ்) (4) இமாம் மாலிக் (ரஹ்)

10. அல்குர்ஆனில் இடம்பெற்றுள்ள நீண்ட சூரா
(1) சூரா அன் நிஸா (2) சூரா ஆல இம்ரான்
(3) சூரா அல் பகரா (4) சூரா அல் மர்யம்

11. கீழே "அ" நிரலில் சில சொற்களும் "ஆ" நிரலில் அதன் கருத்துக்களும் தரப்பட்டுள்ளன.

| நிரல் "அ" | நிரல்"ஆ" |
|---|---|
| 1. இஜாரா | A. வட்டி |
| 2. அஸ்ஸலம் | B. கூட்டுப் பங்குடமை |
| 3. அர்ரிபா | C. வாடகைக்கு விடல் |
| 4. முஷாரகா | D. முற்பண கொடுப்பனவு |

இங்கு "அ" நிரலுக்கு அமைய "ஆ" நிரல் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ள தெரிவு யாது
(1) ABCD (2) BADC (3) CDAB 4. CDBA

12. இல்லத் என்பது
(1) பொதுப்பண்பு (2)அடிப்படை விடயம்
(3) புதிய பிரச்சனை (4) தீர்வு

13. நடுநிலை சமூகம் என்பது
(1) காப்பதுன் லின்னாஸ் (2) உம்மதன் வஸதன்
(3) ரப்புல் ஆலமீன் (4) ஹுதன் லின்னாஸ்

14. தர்தீபுன் நுஸூல் என்பது
(1) அல்குர்ஆன் தொகுக்கப்பட்டுள்ள ஒழுங்கு
(2) அல்குர்ஆனை விளங்குவதற்கான ஒழுங்கு
(3) அல்குர்ஆனை ஓதுவதற்கான ஒழுங்கு
(4) அல்குர்ஆன் அருளப்பட்ட ஒழுங்கு

15. ஸஹீஹைன் என அழைக்கப்படுவது
(1) புகாரி, அபுதாவூத் (2) முஸ்லிம், திர்மிதி
(3) புகாரி, முஸ்லிம் (4) புகாரி, இப்னுமாஜா

16. ஸஹீஹுல் புகாரியில் காணப்படும் ஹதீஸ்களின் எண்ணிக்கை
(1) 7210 (2) 7525 (3) 7325 (4) 7275

17. ஜவாமிஉல் கலிம் என்பது
(1) நாவண்மை (2) ஒரு ஹதீஸ் துறை நூல்
(3) ஒரு தஜ்வீத் சட்டம் (4) நபியவர்களின் சிறப்பு பெயர்

18. இஸ்லாமிய வரலாற்றில் முதன் முதலாக நாணயத்தை அச்சிட்டு வெளியிட்ட ஆட்சியாளர்
(1) அலி (ரலி) (2) உமர் (ரலி) (3) முஆவியா (ரலி) (4) உஸ்மான் (ரலி)

19. 1950 இல் பாகிஸ்தானிற்கான இலங்கையின் உயரஸ்தானிகராக நியமனம் பெற்ற அறிஞர்
(1) T.B.ஜாயா (2) M.C.சித்தி லெப்பை
(3) வாப்புச்சி மறைக்கார் (4) M.C. அப்துல் ரஹ்மான்

20. வரஉ பேணுதல் என்பதைப் போல ஸூஹ்த் என்பது
(1) இறையச்சம் (2) பற்றற்ற வாழ்வு (3) தூய எண்ணம் (4) பொருந்திக்கொள்ளல்

21. இஸ்லாத்தில் முக்கியத்துவம் பெற்றுள்ள மூன்று வணக்கஸ்தலங்களுள் உள்ளடங்காதது
(1) கஃபதுல்லாஹ் (2) மஸ்ஜிதுன் நபவி (3) மஸ்ஜிதுல் குபா (4) மஸ்ஜிதுல் அக்ஸா

22. மக்னா காட்டா உடன்படிக்கை நடைபெற்ற ஆண்டு
(1) 1115 (2) 1215 (3) 1315 (4) 1415

23. “நிச்சயமாக நான் நற்பண்புகளை பூரணப்படுத்துவதற்காகவே அனுப்பப்பட்டுள்ளேன்” என்பது
(1) இமாம்களின் கூற்று. (2) சஹாபாக்களின் கூற்று.
(3) நபியவர்களின் கூற்று. (4) அல்லாஹ்வின் கூற்று

24. கபீலா என்பது கோத்திரம் என்பதைப் போல அஸபிய்யா என்பது
(1) கோத்திரத் தலைவர் (2) கவிஞர்
(3) விருந்தோம்பல் (4) கோத்திர உணர்வு

25. ஸீறத்துர் ரசூலுல்லாஹ் என்ற நூலை முதன் முதலில் எழுதியவர்
(1) இப்னு இஸ்ஹாக் (2) இப்னு கல்தூன்
(3) இப்னு ஷஹ்ரயார் (4) இப்னு அம்மார்

26. பின்வருவோரில் ஒரு பெண்ணுக்கு வலியாக வர முடியாதவர்
(1) தாயின் சகோதரன் (2) தந்தை
(3) தந்தையின் தந்தை (4) உடன் பிறந்த சகோதரன்

27. பூமியை வளப்படுத்தும் செயற்பாடு
(1) கிலாபத் (2) இபாதத் (3) ரிஸாலத் (4) இமாரத்

28. ஒரு பிரிவினரின் மூலதனமும் மற்றொரு பிரிவினரின் உழைப்பும் இணைந்த பொருளாதார செயற்பாடு
(1) முராபஹா (2) முழாரபா (3) முஷாரகா (4) முஸாரஆ

29. உமர் இப்னு அப்துல் அஸீஸின் ஆட்சி காலத்தில் ஸுன்னாவை தொகுப்பதற்கு தலைமை தாங்கியவர்
(1) இமாம் இப்னு இஸ்ஹாக் (2) இமாம் அபூதாவூத்
(3) இமாம் திர்மிதி (4) இமாம் ஸுஹ்ரி

30. காப்பதுன் லின்னாஸ் என்பதன் கருத்து
(1) மனித சமுதாயம் முழுவதற்குமானவர் (2) மனிதர்களின் இரட்சகன்
(3) அகிலத்தாரின் அருட்கொடை (4) அகிலங்களின் இரட்சகன்

31. உம்மஹாத்துல் முஃமினீன் என்போர்
(1) நபி ஸல் அவர்களின் பிள்ளைகள் (2) நபி ஸல் அவர்களின் தோழர்கள்
(3) நேர்வழி பெற்ற கலீபாக்கள் (4) நபி ஸல் அவர்களின் மனைவிமார்கள்

32. அல்குர்ஆனில் உள்ளத்தின் மூன்று நிலைகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது அவற்றுள் நப்ஸுல் அம்மாரா பிஸ்ஸூஃ என்பது
(1) தீமையை ஏவும் உள்ளம்
(2) திருப்தியடைந்த உள்ளம்
(3) இச்சைகளுக்கு எதிராக போராடும் உள்ளம்
(4) சாந்தமான உள்ளம்

33. கொன்ஸ்தாந்துநோபிலை வெற்றி கொண்ட முஸ்லிம் தளபதி
(1) தாரிக் பின் ஸியாத் (2) முஹம்மது அல்பாதிஹ்
(3) ஹஜ்ஜாஜ் பின் யூசுப் (4) முஹம்மத் பின் காசிம்

34. ஹுதைபிய்யா உடன்படிக்கை நடைபெற்ற ஹிஜ்ரி ஆண்டு
(1) ஹிஜ்ரி 5 (2) ஹிஜ்ரி 6. (3) ஹிஜ்ரி 7 (4) ஹிஜ்ரி 8

35. தாருல் பனா என்பது
(1) இவ்வுலக வாழ்வு (2) கப்ரு வாழ்வு
(3) மறுமை வாழ்வு (4) நரக வாழ்வு

36. ஹிதாயத் என்பது
(1) நபி ஸல் அவர்கள் மீது அன்பு வைத்தல்
(2) தூதுத்துவம்
(3) நபித்துவம்.
(4) நேர்வழி

37. "நான் வயிறார உண்டால் ஏழைகளின் பட்டினியை மறந்து விடுவேன் என அஞ்சுகிறேன்" எனக் கூறிய நபி
(1) நபி மூஸா (அலை) (2) நபி ஈஸா (அலை)
(3) நபி யூசுப் (அலை). (4) நபி முஹம்மது (ஸல்)

38. அஜாஇபுல் ஹிந்த் எனும் நூலின் ஆசிரியர்
(1) பலாதூரி (2) இப்னு ஹிஷாம்
(3) இப்னு மாலிக் (4) இப்னு ஷஹ்ரயார்

39. பாரசீக மன்னன் கிஸ்ராவுக்கு நபி (ஸல்) அவர்களின் முத்திரையிடப்பட்ட கடிதங்களை கொண்டு சென்ற நபித் தோழர்
(1) அப்துல்லா இப்னு ஹுதாபா (ரலி) (2) ஹாதிப் இப்னு அபூ பல்தஆ (ரலி)
(3) திஹ்யத் இப்னு கல்பி (ரலி) (4) அம்ர் இப்னு உமைய்யா (ரலி)

40. முஹாஸபா என்பதன் மூலம் கருதப்படுவது
(1) உளத்தூய்மை (2) சுயவிசாரணை
(3) இறை திருப்தி (4) பொறுமையை கடைப்பிடித்தல்

(40X1 = 40 புள்ளிகள்)

***

முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

**கல்வி அமைச்சு** | 16 | T | I, II |

## தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

**இஸ்லாம் - I, II**

### இஸ்லாம் - II

**அறிவுறுத்தல்கள்**

* முதலாம் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* முதலாம் வினாவின் விடைக்கு 20 புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

*1.*

1. வஹியின் பிரிவுகள் இரண்டை குறிப்பிடுக
2. ஜாஹிலியா கால மக்களிடம் காணப்பட்ட நற்பண்புகள் இரண்டு தருக
3. ஸக்காத் பெற தகுதியான இரண்டு பிரிவினர்களை குறிப்பிடுக
4. திருமண உறவின் மூலம் மஹ்ரமாக்கப்பட்டுள்ள நால்வரை குறிப்பிடுக
5. பர்ளு கிபாயாவுக்கு இரண்டு உதாரணங்கள் தருக
6. நோன்பின் பர்ளுகள் இரண்டு தருக
7. தொழுகையின் லௌகீகப் பயன்கள் இரண்டு தருக
8. கியாஸின் அர்க்கான்கள் நான்கினை தருக
9. இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள உரிமைகள் இரண்டு தருக
10. பொருளீட்டலை வணக்கமாக்கிக் கொள்வதற்கான இரண்டு வழிமுறைகள் தருக.

(2×10 = 20 புள்ளிகள்)

*02.*

1. ஹதீஸ் என்பதன் இஸ்லாமிய பரிபாசை கருத்தை குறிப்பிடுக
2. ஹதீஸ்களை பாதுகாப்பதற்காக கையாளப்பட்ட மூன்று வழிமுறைகளைத் தருக
3. அஸ் ஸிஹாஹுஸ் ஸித்தாவில் உள்ளடக்கப்பட்டுள்ள ஹதீஸ் நூல்கள் ஐந்தும் அதன் ஆசிரியர்கள் ஐந்து பேரின் பெயர்களையும் தருக.

(2+3+5 = 10 புள்ளிகள்)

*03.*

1. ஸக்காத்தின் பர்ளுகள் யாவை
2. நோன்பினால் கிடைக்கும் பயன்கள் மூன்று தருக
3. தொழுகையின் முக்கியத்துவத்தை குறிப்பிட்டு அதன் மூலம் கிடைக்கும் சமூக பயன்கள் மூன்று தருக

(2+3+5 = 10 புள்ளிகள்)

*04.*

1. இபாதத் என்றால் என்ன
2. இபாதத்தின் நோக்கங்கள் மூன்று தருக
3. எமது அன்றாட செயல்பாடுகள் இபாதத்தாக மாற்றியமைக்க கடைபிடிக்க வேண்டிய நிபந்தனைகள் 5 தருக.

(2+3+5 = 10 புள்ளிகள்)

**05.**

1. ஈமானை பாதிக்கும் அம்சங்கள் இரண்டு தருக
2. நிரந்தர மஹ்ரம்கள் உருவாகும் முறைகள் மூன்றையும் குறிப்பிடுக.
3. இஸ்லாமிய பொருளாதார முறையின் சிறப்பம்சங்கள் ஐந்தினைக் குறிப்பிடுக

(2+3+5=10 புள்ளிகள்)

**06.**

1. ஆரம்பத்தில் இலங்கையில் முஸ்லிம்கள் குடியேறி வாழ்ந்த இடங்கள் இரண்டை குறிப்பிடுக
2. இலங்கைக்கு அரேபியர்கள் வருகை தந்தமைக்கான காரணங்கள் மூன்று தருக
3. தேசிய நலனுக்கு இலங்கை முஸ்லிம்கள் ஆற்றிய பங்களிப்புகள் ஐந்தை குறிப்பிடுக

(2+3+5 = 10 புள்ளிகள்)

**07.** பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டுக்கு சிறு குறிப்பு எழுதுக.

1. இமாம் ஷாபிஈ (ரஹ்)
2. மஸ்ஜிதுல் நபவி
3. அல்குர்ஆன் தொகுக்கப்படல்
4. ஈகை

(5+5=10 புள்ளிகள்)

***